# 2024 நாடாளுமன்றத் தேர்தலையொட்டி தி.மு.க. தலைமைக் கழக அறிவிப்புகள் !

## 2024 - நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழு

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான கழகப் பணிகளை ஒருங்கிணைக்கவும் மேற்பார்வையிடவும் பின்வரும் குழு அமைக்கப்படுகிறது.

**மாண்புமிகு கே.என்.நேரு**
**திரு.ஆர்.எஸ்.பாரதி**
**மாண்புமிகு எ.வ.வேலு**
**மாண்புமிகு தங்கம் தென்னரசு**
**மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின்**

**மு.க.ஸ்டாலின்**
தலைவர்,
தி.மு.க.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18-01-2024

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திடும் குழு

பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

தொகுதி உடன்பாடு குறித்து கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட

**தி.மு.க. தலைமைக் கழகம் அமைத்துள்ள குழு**

குழு தலைவர் : **திரு.டி.ஆர்.பாலு** (கழகப் பொருளாளர்)

குழு உறுப்பினர்கள் :
**திரு.கே.என்.நேரு** (கழக முதன்மைச் செயலாளர்)
**திரு.இ.பெரியசாமி** (கழகத் துணைப் பொதுச்செயலாளர்)
**திரு. க.பொன்முடி** (கழகத் துணைப் பொதுச்செயலாளர்)
**திரு. ஆ.ராசா,** எம்.பி., (கழகத் துணைப் பொதுச்செயலாளர்)
**திரு. திருச்சி சிவா,** எம்.பி., (கழக கொள்கைப் பரப்புச் செயலாளர்)
**திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்** (கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்)

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18-01-2024

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்க குழு

பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையினைத் தயாரிக்க அமைக்கப்பட்ட குழுவினர் விவரம்:

**தலைமை:**
**திருமிகு. கனிமொழி கருணாநிதி எம்.பி.,** (கழகத் துணைப் பொதுச் செயலாளர்)
**திரு. டி.கே.எஸ்.இளங்கோவன்** (தலைமைக் கழகச் செய்தித் தொடர்புத் தலைவர்)
**திரு. ஏ.கே.எஸ்.விஜயன்** (கழக விவசாய அணிச் செயலாளர்)
**மாண்புமிகு பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன்** (கழகச் சொத்துப் பாதுகாப்புக் குழுச் செயலாளர்)
**மாண்புமிகு டி.ஆர்.பி.இராஜா** (கழகத் தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர்)
**மாண்புமிகு கோவி.செழியன்** (கழக வர்த்தகர் அணி துணைத் தலைவர்)
**திரு. கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி.,**
**திரு. சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ.,** (கழக மாணவரணிச் செயலாளர்)
**திரு. எம்.எம்.அப்துல்லா எம்.பி.,** (கழக அயலக அணிச் செயலாளர்)
**மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.,** (கழக மருத்துவ அணிச் செயலாளர்)
**மாண்புமிகு மேயர் பிரியா**

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18-01-2024

அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசல் குறையும்! ரூ.621 கோடி மதிப்பில்

# தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை உயர் மட்டச் சாலை!

## கட்டுமானப் பணியை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன.20-

சென்னை, அண்ணா சாலையில் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை ரூ.621 கோடி மதிப்பீட்டிலான நான்கு வழித்தட உயர்மட்டச் சாலை கட்டுமான பணி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.1.2024) நெடுஞ்சாலைத் துறை சார்பில் சென்னை, சைதாப்பேட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சி யில், அண்ணா சாலையில் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை 621 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3.20 கி.மீ. நீளத்திற்கு கட்டப்படவுள்ள நான்கு வழித்தட உயர் மட்டச் சாலை கட்டுமானப் பணியை தொடங்கி வைத்தார். சுமார் 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த சென்னை, அண்ணா சாலை சென்னை மாநகரின் மிகவும் முக்கியமான சாலை என்பதால் போக்குவரத்து நெரிசல் மிகுதியாக காணப்படுகிறது. அண்ணாசாலையில் பல்வேறு அரசுத் துறைகளின் தலைமையங்கள், கல்வி நிறுவனங்கள், தனியார் வர்த்தக மையங்கள், வணிக வளாகங்கள் வங்கித் தலைமையகங்கள், மருத்துவமனைகள், நட்சத்திர விடுதிகள் மற்றும் தொழில் நிறுவனங்கள் இயங்கி வருவதால் இச்சாலை எப்போதும் பரபரப்பாக காணப்படும்.

குறிப்பாக, தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை உள்ள 3.5 கி.மீ தூரத்தை கடக்க சராசரியாக 25 முதல் 30 நிமிடங்கள் ஆகின்றது. இப்பகுதிக்குட்பட்ட அனைத்து சாலை சந்திப்புகளிலும் வாகனங்கள் அணிவகுத்து அதிகநேரம் காத்திருக்கும் சூழல் உள்ளது. இதிலும் குறிப்பாக நந்தனம் சந்திப்பு, சிஐடி நகர் சந்திப்பு ஆகியவற்றில் காலை மற்றும் மாலை நேரங்களில் வாகனங்கள் சுமார் 2 கி.மீ நீளத்திற்கு காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது.

2022-23-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் அறிவித்தபடி அண்ணா சாலையில் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை ரூ.621 கோடி மதிப்பீட்டிலான நான்கு வழித்தட உயர்மட்டச் சாலை

எனவே, இப்போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வுகாணும் வகையில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் 202223 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், சென்னை அண்ணா சாலையில், 5 குறுக்கு சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வண்ணம், தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை உயர்மட்டச் சாலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, தேனாம்பேட்டையிலிருந்து சைதாப்பேட்டை வரை உள்ள முக்கிய சாலை சந்திப்புகளான ஆழ்வார்பேட்டை தேனாம்பேட்டை பகுதிகளை பாண்டிபஜார் அண்ணாசலையுடன் இணைக்கும் எல்டாம்ஸ் சாலை சந்திப்பு, தி.நகர் பகுதிகளை இணைக்கும் தியாகராயா சாலை சந்திப்பு, டி.டி.கே சாலையை அண்ணாசலையுடன் இணைக்கும் SIET கல்லூரி சாலை சந்திப்பு, சென்னை டாஃப் சாலை சந்திப்பு, சென்னை மாநகரின் முக்கிய சந்திப்புகளில் ஒன்றான நந்தனம் சந்திப்பு, தி.நகர் பேருந்து நிலையம், உஸ்மான் சாலையை இணைக்கும் CIT நகர் மூன்றாவது மற்றும் முதல் பிரதான சாலை சந்திப்பு, சைதாப்பேட்டையில் உள்ள தாடண்டர் நகர் ஜோன்ஸ் சாலை சந்திப்பு ஆகிய 7 முக்கிய சாலை சந்திப்புகளை கடக்கும் வகையில் சைதாப்பேட்டை பேருந்து நிலையம் வரை 3.20 கி.மீ நீளத்திற்கு 14 மீ அகலம் கொண்ட நான்கு வழித்தட உயர்மட்ட சாலை அமைக்க திட்டமிடப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

அண்ணாசாலையின் கீழே சென்னை மெட்ரோ ரயிலின் சுரங்க பாதை செல்வதனால் இதை வடிவமைப்பது பெரும் சவாலாகவே இருந்து வந்தது. இப்பாலத்திலிருந்து வரும் அழுத்தம் சாலையின் கீழே தற்போது இயங்கி வரும் சென்னை மெட்ரோ ரயில் சுரங்கப் பாதைகளை சிறிதளவும் பாதிக்காத வண்ணம் வடிவமைக்க வேண்டி இருந்தது, மேலும் பாலத்தின் அடித்தளம் அமைக்க ஆழமான பள்ளங்களை மற்றும் நீண்ட துளைகளை (piling technique) எடுக்க முடியாத சூழலும் இருந்தது. எனவே ஆழம் குறைந்த அடித்தளம் (shallow Foundation) மட்டுமே அமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது ஆனால், இப்பகுதியில் மண்ணின் தாங்கும் திறன் குறைந்த அளவே உள்ளதால், ஆழம் குறைந்த அடித்தளம் கொண்டு வடிவமைப்பது சாத்தியமற்றானது.

இதற்கு தீர்வு காண பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவன வல்லுநர்கள், ஐ.ஐ.டி. மெட்ராஸ் வல்லுநர்கள் மற்றும் இங்கிலாந்து, ஜெர்மன் நாட்டு தொழில் நுட்ப நிபுணர்கள் ஆகியோருடன் கலந்தாலோசித்து இந்த உயர்மட்ட சாலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு முயற்சிகளுக்குப் பிறகு பாலத்தின் அழுத்தத்தை குறைக்கும் வகையில் இரும்பினால் ஆன முன்வார்க்கப்பட்ட (prefabricated) கட்டமைப்பு உபகரணங்களைக் கொண்டும், மண்ணின் தாங்கு திறனை நவீன தொழில்நுட்பத்தை கொண்டு மேம்படுத்தி அடித்தளம் அமைக்கும் வகையிலும், வடிவமைக்கப்பட்டு கட்டுமான பணிகளை 621 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ள இறுதி செய்யப்பட்டது. மேலும் இப்பணி (பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம்) ஒப்பந்த முறையில் மேற்கொள்ளப்படவுள்ளது

மெட்ரோ ரயில் சுரங்கங்கள் அமைந்துள்ள நேர்பாட்டில் கட்டப்படும் முதல் உயர்மட்ட சாலை இதுவே என்பது குறிப்பிடத்தக்கது. இந்த உயர்மட்ட சாலையின் மூலம் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரையிலான 3.5 கி.மீ தூரத்தை 3 முதல் 5 நிமிடத்திலேயே கடந்து செல்லலாம். மேலும் கட்டுமானம் நிறைவடையும்போது சென்னை மாநகரின் மிக நீண்ட பாலமாக இப்பாலம் அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில், பொதுப் பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் க.கணபதி, துணை மேயர் மு.மகேஷ் குமார், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தலைமை பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) ஆர். சந்திரசேகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சேலம் மத்திய மாவட்டம் ஓமலூரில் ஒன்றிய தி.மு.க. செயலாளர். ஓ.எம்.ரமேஷ் முன்னிலையில் நடைபெற்ற பொங்கல் விழாவில் மாவட்ட கழக செயலாளர் இரா.இராஜேந்திரன். எம்.எல்.ஏ. உதயநிதி நற்பணி மன்ற பொதுச் செயலாளர் பி.கே.பாபு ஆகியோர். கலந்து கொண்டு பொது மக்களுக்கு கரும்பு, பொங்கல் வழங்கினார்கள். உடன் மாவட்ட கவுன்சிலர்கள், சண்முகம், அழகிரி, சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர் பி.குப்புசாமி, பேரூர் செயலரளர் ரவிச்சந்திரன், செல்வராணி உட்பட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

கேலோ இந்தியா புதிய சரித்திரம் படைக்கட்டும்

## தமிழ்நாட்டிலிருந்து சிறந்த வீரர்கள் வந்திருக்கிறார்கள்!

**கே**லோ இந்தியா தொடக்க விழாவில் உரையாற்றிய பிரதமர் மோடி. விஸ்வநாதன் ஆனந்த், பிரக்ஞானந்தா, பாரா ஒலிம்பிக் மாரியப்பன் ஆகிய சிறந்த வீரர்கள் தமிழ்நாட்டிலிருந்து வந்திருக்கிறார்கள் என்று பெருமிதம் தெரிவித்தார்.

தற்போது 13வது கேலோ இந்தியா போட்டி தமிழ்நாட்டின் 4 முக்கிய நகரங்களில் நடைபெறவுள்ளது என்று தெரிவித்த பிரதமர் மோடி, 36 மாநிலங்களின் வீரர், வீராங்கனைகள் இப்போட்டியில் பங்கேற்கிறார்கள் என்று கூறினார்.

அனைத்து வகையான விளையாட்டு வீரர்களும் இங்கே தங்கள் திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பை பெற்றுள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

கேலோ இந்தியா போட்டிக்காக உருவாக்கப்பட்டுள்ள இலச்சினை மிகச்சிறப்பாக அமைந்துள்ளது என்று தெரிவித்த பிரதமர் மோடி, அனைத்து தரப்பு மக்களும் திறமைகளை வெளிப்படுத்தி முன்னேற்றம் காண இப்போட்டி வழிவகுக்கிறது என்று கூறினார்.

ஒலிம்பிக் போட்டியை இந்தியாவில் நடத்துவதற்கான சூழலை உருவாக்கி வருகிறோம் என்றும் பிரதமர் மோடி தெரிவித்தார்.

**- பிரதமர் மோடி**
(கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டி நேரு ஸ்டேடியம் - 19.01.2024)

சேலம் இளைஞரணி மாநாட்டுச் சுடர் ஓட்டத்திற்கு

## விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் சிறப்பான வரவேற்பு!

அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில்!

விழுப்புரம், ஜன. 20 -

சேலத்தில் நடைபெறவுள்ள இளைஞர் அணி 2 வது மாநில மாநாடு சுடர் ஓட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளித்து மாவட்டத்தில் சுடர் ஓட்டத்தை துவக்கி வைத்தார்

சேலத்தில் நாளை ( 21.1.2024 ) இளைஞர் அணி 2 வது மாநில மாநாடு நடைபெறுவதையொட்டி நேற்று கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் இருந்து சேலத்திற்கு சுடர் ஓட்டத்தை தொடங்கிவைத்தார்,

சென்னையை தொடர்ந்து செங்கல்பட்டு, மதுராந்தகம் வழியாக விழுப்புரம்வடக்கு மாவட்டம் திண்டிவனத்திற்கு நேற்று காலையில் வந்தடைந்த சுடர் ஓட்டம் சுடருக்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது,

சுடரை ஏந்தி வந்த விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும் சிறுபான்மையர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தானிடம் ஒப்படைத்தபின் இளைஞர் எழுச்சி வீரவணக்க முழக்கங்களை எழுப்பி சுடர் ஓட்டத்தை அமைச்சர் செஞ்சிமஸ்தான் துவக்கி வைத்தார்,

இதைத் தொடர்ந்து மயிலம் ஒன்றியம் கூட்டேரிப்பட்டில்மாநாடு சுடர்ஓட்டத்திற்குஅமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளித்து இளைஞரணி மாநாடு சுடர் ஓட்டத்தை வரவேற்றனர். இதைத் தொடர்ந்து மாநாடு சுடர் ஓட்டம் விழுப்புரம் சென்றடைந்து.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன் ,மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர்,துணைச் செயலாளர் ரவிக்குமார்,பொருளாளர் ரமணன் ,நகர செயலாளர் கண்ணன்,நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சி விஜயகுமார், மரக்காணம் தயாளன், ஒலக்கூர் சொக்கலிங்கம்,மயிலம் யோகேஸ்வரி மணிமாறன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன்,நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், ராஜாராமன்,பழனி, ரவிச்சந்திரன்,மணிமாறன், செழியன்,அண்ணாதுரை, துரை. இளம்வழுதி, பொதுக்குழு உறுப்பினர்கள் கதிரேசன்,செல்வராஜ், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ராஜசக்தி,மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கோபிநாத், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி, முன்னாள் துணை செயலாளர் அசோகன்,மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் சிவகாமி,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எம்.டி. பாபு, டி. கே. பி .ரமேஷ் அண்ணாமலை,வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் கன்னியப்பன், உள்ளிட்டோர்கலந்து கொண்டனர்.